# நமது குறிக்கோள்

# நமது சமய நம்பிக்கையும் குறிக்கோளும்

ஓம்

எல்லாவற்றிற்கும் அப்பாட்டதும் நீக்கமற நிறைத்திருக்கும் ஒன்றே தெய்வீகம். இது எல்லா உயிரினங்களிலும் உள்ளது. முக்கியமாக மனிதனேயம் கொண்ட இதயங்களில் தென்படுகிறது. தெய்வீகத்தை நாடுபவர்களுக்கு நேர்மை, மகிழ்ச்சி, அன்பு, அறிவு, உயரிய மரியாதை முதலியன கிடைக்கும். நம் உடலே இறைசக்தி குடிகொண்ட கோயில். அதனால் மனிதனின் கடமையானது எல்லா உயிரினங்களுக்கும் பக்தியுடன் முழுமனதுடன் பணி செய்து அவ்விறை சக்தியை பெருமை படுத்தி தன்னை உணர்வதாகும்.

தேவி மண்டீரின் தலையாய கோட்பாடு இறை சக்தியின் வழிபாட்டை ஊக்குவித்தல் ஆகும். சாதுமார்கள் ரிஷிமார்கள் ஆகியோரின் மார்க்கத்தை ஆர்வத்துடன் பின்பற்றி செல்வதே எங்களின் குறிக்கோள் ஆகும். இவர்களை சரித்திரத்தில் மட்டும் இடம் பெற்றவர்களாக கருதக்கூடாது. இவர்கள் இன்றும் நம்மிடையே உள்ளார்கள். இதை ஸ்ரீ மா மற்றும் சுவாமி சத்தியானந்த சரஸ்வதி இவர்களிடம் காணலாம். இவர்களைப் பின்பற்றுவதால் நாம் ஞான நெறியில் மூழ்கி இப்பிறவியின் பயனை அடையலாம். நம்மில் சிலர் எதிர்கால சந்ததியினருக்காக சாதுக்களாகவும் ரிஷிகளாகவும் கூட மாறலாம். சனாதன தர்மத்தின் நெறிமுறைகள் முழுமை பெறுவதற்கு நாம் முன்னோடிகளாக வாழ்ந்து மேலும் மெருகடையச் செய்யவேண்டும்.

தேவி மண்டீர் ஓர் ஆலயம். அது ஸ்ரீ மா மற்றும் சுவாமிஜி அவர்களின் இருப்பிடம். இது ஒரு ஆசிரமமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இங்கு தான் அவர்கள் தங்களின் சாதனைகளை புரிந்து தர்ம நெறியில் வாழ்கின்றார்கள். அவர்கள் கருணை மிக்கவர் ஆதலால் வருகையாளர்களை சூழ்நிலைகேற்ப அனுமதிக்கிறார்கள்.

வருகையாளர்கள் அவர்களின் வழிபாட்டிற்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முடிந்த வரை அவர்களுக்கு முடிந்த உதவிகள் செய்ய ஊக்குவிக் கப்படுகிறார்கள். அதன் பின் அவர்கள் வாழ்க்கை நெறியை பின்பற்றி தாங்களும் அதன் படி வாழ முற்பட வேண்டும்.

தயவு செய்து அனுமதியின்றி அவர்கள் இருப்பிடத்திகோ அல்லது கோயிலுக்கோ சென்று தொந்தரவு செய்ய வேண்டாம். அவர்களாகவே உங்களை அழைக்கும் வேளை ஏற்படும்.

அவர்களாகவே நம்மை தொடர்ந்து பார்க்க அவர்கள் அனுமதிக்கும் வரை பொருத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டும் அல்ல நமது வருகை அவர்களுக்கு இடையூறு இன்றி அவர்கள் சகஜமாக இருக்க உதவ வேண்டும். இதற்கு நாம் நன்றி நவில்கிறோம்.

இது ஒரு பொது இடமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முடிந்த வரை பக்தியுடன் ஞான நெறியில் தங்களை அர்ப்பணித்து ஸ்ரீ மா மற்றும் சுவாமிஜி அவர்களின் போதனைகளை பின்பற்ற வேண்டும். அவர்களுக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டும் என விரும்பினால் சற்றும் தயங்காமல் கேளுங்கள். தெய்வ நெறியில் உள்ளவர்களுக்கு பணி புரிவது ஒரு அரும் பெரும் தவமாகும்.